# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## 1.0 முன்னுரை

தமிழ்நாடு அரசு, அரசாணை எண். 340, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள்: 19.02.1982–ல் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 (மத்திய அரசு சட்டம் 6) பிரிவு 4 (1)–ஐ அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியத்தினை நிறுவியது. தமிழ்நாடு அரசிதழில் அறிவிப்பு செய்த நாளான 27.02.1982–லிருந்து வாரியம் இயக்கத்தில் உள்ளது. நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983 அறிவிக்கை செய்யப்பட்ட பின் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் முழுமையான நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியம் தலைவர், உறுப்பினர் செயலர், மாநில அரசின் பிரதிநிதிகளாக ஐந்து பேரும், உள்ளாட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளாக ஐந்து பேரும், வேளாண்மை, மீன்வளம் அல்லது தொழிற்சாலை அல்லது வர்த்தகம் ஆகிய பிரிவுகள் சார்பாக மூன்று அரசுசாரா பிரதிநிதிகளும் மற்றும் நிறுவனங்கள், மாநில அரசுக்கு சொந்தமான கழகங்களின் பிரதிநிதிகளாக இரண்டு பேரும்



கொண்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அமைந்துள்ளது.

## 2.0 சட்டம் மற்றும் விதிகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 மற்றும் அதன் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட கீழ்கண்ட விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகியவற்றை செயல்படுத்தி வரும் சட்டப்பூர்வமான அமைப்பாகும்.


- தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983
- தமிழ்நாடு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983
- சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள், 1986
- நிலக்கரி சாம்பல் பயன்படுத்துதல் அறிவிக்கை, 1999
- ஒலி மாசு (ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 2000
- மின்கலன்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 2001

- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006
- தீங்கு விளைவிக்கும் வேதிப் பொருட்கள் உற்பத்தி, சேமித்தல் மற்றும் இறக்குமதி விதிகள், 1989
- தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016
- மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள், 2016
- திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016
- பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016
- மின்னணு கழிவு மேலாண்மை விதிகள், 2016
- கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள், 2016
- கடலோர ஒழுங்குமுறை மண்டலம் அறிவிக்கை, 2019

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் முன்னர் அமல்படுத்தப்பட்ட நீர் மேல்வரி (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1977, சரக்கு மற்றும் சேவை வரி 01.07.2017 முதல் அமலுக்கு வந்ததை தொடர்ந்து திரும்பப் பெறப்பட்டது.



## 3.0 நிறுவன அமைப்பு



தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நிறுவன அமைப்பு, தலைமை அலுவலகம், ஏழு மண்டல அலுவலகங்கள் மற்றும் 38 மாவட்ட அலுவலகங்கள் என மூன்று அடுக்குகளைக் கொண்டு, ஒப்புதல் பெறப்பட்ட எண்ணிக்கையான 998 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. வாரியத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள், நீர்நிலைகள் மற்றும் சுற்றுப்புற காற்று தரத்தினை கண்காணிக்க ஏழு இடங்களில் இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) தலைமையில் மண்டல அலுவலகங்கள், 38 இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இரண்டு பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 16 ஆய்வகங்கள் (8 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் மற்றும் 8 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள்) வாரியத்தால் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன.



## 4.0 செயல்பாடுகள்

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981, ஆகியவற்றின் சரத்துகளை வாரியம் அமல்படுத்துகிறது. மேற்குறிப்பிட்ட சட்டங்களின் பிரிவு 17ன்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:

- ஓடைகள், கிணறுகள் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் பற்றிய விரிவான திட்டம் தீட்டுதல் மற்றும் செயல்படுத்துதல்.
- நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
- வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறனை ஆய்வு செய்தல் மற்றும் திட்டங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான விவரங்கள், வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலை கழிவு நீர் சுத்திகரிப்பு செய்து நிலத்தில் வெளியேற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்தல்.
- காற்று மாசு கட்டுப்பாடு பகுதிகளில் காற்றின் தன்மையை அளவீடு செய்ய குறிப்பிட்ட

இடைவெளிகளில் அதன் அவசியத்தை பொருத்து, காற்றின் தரத்தை அளவீடு செய்து அப்பகுதிகளில் காற்று மாசினைக் கட்டுப்படுத்துவதற்கும், தடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுக்க, கட்டுப்படுத்த மற்றும் குறைப்பது சம்பந்தமான திட்டங்களில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் அது குறித்து பெருமளவில் விழிப்புணர்வு கல்வி நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- நீர் மாசுபடுதலை தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் குறித்து ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகள் ஆகியவற்றை மேற்கொள்ளுதல், பங்கேற்றல் மற்றும் ஊக்கமளித்தல்.
- வாரிய செயல்பாடுகளை சீரியமுறையில் மேற்கொள்வதற்கும் மற்றும் நீர்நிலைகளில் நீர் மாதிரிகள், வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீர், வாயுக்கழிவு மாதிரிகள் சேகரித்து அதனை பகுப்பாய்வு செய்வதற்கு ஆய்வகம் அமைத்தல் அல்லது ஆய்வகங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்.



- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாநில அரசு அவ்வப்போது குறிப்பிடும் இதுபோன்ற பிற பணிகளையும் நிறைவேற்றுதல்.

## 5.0 இசைவாணை மேலாண்மை

தமிழ்நாடு தொழிற்சாலைகள் நிறைந்த மாநிலமாகவும், சிறிய மற்றும் நடுத்தர வகை தொழிற்சாலைகள் அதிக அளவில் கொண்டுள்ள இரண்டாவது பெரிய மாநிலமாகவும் உள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் காற்று மற்றும் நீர் மாசினை கண்காணிப்பதற்காக, நிறுவுவதற்கான இசைவாணை (Consent to Establish) மற்றும் இயக்குவதற்கான இசைவாணை (Consent to Operate) வழங்கும் முறையை பின்பற்றி வருகிறது. தொழிற்சாலைகளுக்கு இரண்டு கட்டங்களாக இசைவாணை வழங்கப்படுகிறது. முதல் கட்டமாக, தொழிற்சாலையினை நிறுவுவதற்கான இசைவாணை, தொழிற்சாலை கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்கு முன்னதாக பொருத்தமான இடத்தில் அமைய உள்ளதா என ஆய்வு செய்து வழங்கப்படும். இரண்டாவது கட்டமாக, தொழிற்சாலையினை இயக்குவதற்கான இசைவாணை அத்தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட நிறுவுதல் இசைவாணையின்படி,

தொழிற்சாலையினை நிறுவி மற்றும் அதில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்ததை உறுதிசெய்த பின் வழங்கப்படுகிறது.

மேற்கண்ட சட்டம் மற்றும் விதிகளை திறம்பட மற்றும் பயனுள்ள வகையில் செயல்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது பல்வேறு குழுக்களை தலைமை அலுவலகம், மண்டல அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலக அளவில் அமைத்துள்ளது. இக்குழுக்கள் கூட்டங்களை நடத்தி இசைவாணை வழங்குதல், இசைவாணை புதுப்பித்தல் மற்றும் கழிவு மேலாண்மைக்கான அங்கீகாரம் வழங்குதல் முதலியவை குறித்து முடிவு செய்கின்றன.

## 5.1 தொழிற்சாலை வகைப்பாடு

இசைவாணை வழங்குதல், தொழிற்சாலை கண்டறிதல் மற்றும் அது தொடர்பான பிற பணிகள், ஒரே சீராக தொழிற்சாலைகளை வகைப்படுத்த சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளை என்று மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் தனது 7.3.2016 நாளிட்ட கடிதத்தின் மூலம் மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் வாரியம், தொழிற்சாலைகளை கண்காணிக்கும் பொருட்டு, அவற்றின்



மாசு ஏற்படுத்தும் திறன் மற்றும் மொத்த நிலையான சொத்து மதிப்பு ஆகியவற்றைக் கொண்டு தொழிற்சாலைகளை வகைப்படுத்தியுள்ளது. இவ்விதமாக தொழிற்சாலைகள் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை அல்லது வெள்ளை மற்றும் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுறுத்துதல்களின் அடிப்படையில் வெள்ளை வகை தொழிற்சாலைகள் இயக்குவதற்கான இசைவாணை பெற அவசியமில்லை. இவைகள் இயங்குவது அந்தந்த மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு தகவல் தெரிவித்தால் மட்டும் போதுமானது.

| மொத்த நிலையான சொத்து மதிப்பின் அடிப்படையில் | மொத்த நிலையான சொத்து மதிப்பு (கோடியில்) | மாசு ஏற்படுத்தும் திறன் அடிப்படையில் | | | |
|---|---|---|---|---|---|
| | | சிவப்பு | ஆரஞ்சு | பச்சை | வெள்ளை |
| பெரியது | > 10 | அதிக மாசு ஏற்படுத்துபவை | மிதமான மாசு ஏற்படுத்துபவை | குறைந்த மாசு ஏற்படுத்துபவை | மாசு ஏற்படுத்தாதவை |
| நடுத்தரம் | 5–10 | | | | |
| சிறியது | < 5 | | | | |

மேலும், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுறுத்துதல்களின் அடிப்படையில் சில அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் 17 வகை தொழிற்சாலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 5.2 இணைய வழி இசைவாணை மேலாண்மை

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழில் முனைவோர் சமர்ப்பிக்கும் திட்ட விளக்க உரைகளின் அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கான நிறுவுதல் மற்றும் இயக்குவதற்கான இசைவாணைகளை வழங்கி வருகிறது. தமிழக அரசின் மின் ஆளுமை முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஒழுங்குமறைப்படுத்தும் ஆணையம் மற்றும் தொழில் முனைவோர்களுக்கிடையே ஆரோக்கியமான மற்றும் செயல் திறனுடன் கூடிய தொடர்பினை ஏற்படுத்தவும், இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறையினை (Online Consent Management and Monitoring System) 19.1.2015 முதல் அமல்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அடிப்படை பணிகளில் ஒன்றான, இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறையை, இணையதளத்தினை அடிப்படையாக கொண்டு, மென்பொருள் மூலமாக செயல்படுத்தி வருகிறது. இம்முறையின் மூலமாக, நிறுவுவதற்கான இசைவாணை, இயக்குவதற்கான இசைவாணை மற்றும் இசைவாணை புதுப்பித்தல் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் மற்றும் உரிய ஆவணங்கள் பதிவேற்றல், இசைவாணை கட்டணம் செலுத்தல், விளக்கங்கள் சமர்ப்பித்தல் ஆகிய



செயல்பாடுகளை வெளிப்படையாகவும், விரைவாகவும் தொழில் முனைவோர் மேற்கொள்வதற்கும் மற்றும் விண்ணப்பங்களின் நிலையினை அறிந்து கொள்வதற்கும் இவ்விணையதளம் வழிவகுக்கிறது. தொழில் முனைவோருக்கு விண்ணப்படிவங்களை இணைய வழியில் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதற்கு உதவும் வகையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாவட்ட அலுவலகங்களில் உதவி மையங்களை அமைத்துள்ளது.

வாரியம், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு திட்டத்தின்கீழ் வரும் தொழிற்சாலைகளுக்கு 7 வருட காலத்திற்கும் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு திட்டத்தின் கீழ் வராத தொழிற்சாலைகளுக்கு 5 வருட காலத்திற்கும் செல்லத்தக்கப்படி தொழிற்சாலை நிறுவுவதற்கான இசைவாணைகளை வழங்குகின்றது. தொழிற்சாலைகளை இயக்குவதற்கான இசைவாணை சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகையான தொழிற்சாலைகளுக்கு முறையே ஐந்து, பத்து மற்றும் பதினான்கு வருடம் செல்லத்தக்கப்படி வாரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்த தகுதிகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. மேலும், சிறிய சிவப்பு வகை தொழிற்சாலைகள் மற்றும் அனைத்து ஆரஞ்சு மற்றும் பச்சை வகை தொழிற்சாலைகளின் இசைவாணையை புதுப்பிக்க,

இசைவாணை கட்டணம் செலுத்தி மற்றும் முந்தைய இசைவாணை நிபந்தனைகளை பூர்த்தி செய்திருப்பின் முன்ஆய்வு செய்யப்படாமல், அவர்கள் அளிக்கும் சுய சான்றிதழின் அடிப்படையில் தானியங்கி இசைவாணை புதுப்பித்தல் முறையில் (Auto Renewal) இசைவாணை புதுப்பித்து வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால்
2019–2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இசைவாணைகளின் விவரம்

| ஆண்டு | வழங்கப்பட்ட இசைவாணைகள் | | |
|---|---|---|---|
| | நிறுவுவதற்காக | இயக்குவதற்காக | புதுப்பிப்பதற்காக |
| ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை | 656 | 4975 | 7575 |

5.3 தொழிற்சாலை ஆய்வு மற்றும் மாதிரி சேகரிப்பு கால வரையறை

கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கால அளவுகளின் படி தொழிற்சாலைகளில் ஆய்வு மற்றும் கழிவுநீர் மாதிரி சேகரிப்பினை வாரியம் மேற்கொள்கிறது.



| தொழிற்சாலை பிரிவு | வகை | ஆய்வு | கழிவுநீர் மாதிரி சேகரிப்பு |
|---|---|---|---|
| பெரியது | சிவப்பு | 3 மாதத்திற்கு ஒரு முறை | மாதத்திற்கு ஒரு முறை |
| | ஆரஞ்சு | 6 மாதத்திற்கு ஒரு முறை | 4 மாதத்திற்கு ஒரு முறை |
| | பச்சை | 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை | ------ |
| நடுத்தரம் | சிவப்பு | 4 மாதத்திற்கு ஒரு முறை | 3 மாதத்திற்கு ஒரு முறை |
| | ஆரஞ்சு | 6 மாதத்திற்கு ஒரு முறை | 6 மாதத்திற்கு ஒரு முறை |
| | பச்சை | 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை | ------ |
| சிறியது | சிவப்பு | ஆண்டுக்கு ஒரு முறை | 3 முதல் 6 மாதத்திற்கு ஒரு முறை |
| | ஆரஞ்சு | 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை | 6 மாதத்திற்கு ஒரு முறை |
| | பச்சை | 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை | ------ |
| 17 வகை தொழிற்சாலைகள் | | மாதத்திற்கு ஒரு முறை | மாதத்திற்கு ஒரு முறை |

## 5.4 பொது மக்கள் கருத்து கேட்புரை

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006–ன்படி "A" வகை தொழிற்சாலைகள் இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்தும் மற்றும் "B" வகை தொழிற்சாலைகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமத்திடமிருந்தும் சுற்றுச்சூழல் அனுமதியினை முன்னதாக பெறுவது அவசியமாகும். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்துகின்றது. கூட்டத்தில் பொது மக்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு அதன் அறிக்கை மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் அல்லது மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை வாரியம் 23 திட்டங்களுக்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டங்களை நடத்தியுள்ளது.



## 6.0 இணைய வழி குறைதீர்வு முறை

பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசு கட்டுப்பாடு சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு அதிகமாக ஏற்பட்டுள்ளதால் நீர், காற்று மற்றும் ஒலி மாசு பற்றிய புகார்கள் பொதுமக்கள், நிறுவனங்கள் மற்றும் அரசுசாரா அமைப்புகளிடமிருந்து பெறப்படுகின்றன. புகார்களை இணைய வழியாக பதிவு செய்வதற்கு ஏதுவாக மென்பொருள் வசதி 01.03.2016 முதல் வாரியத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை மொத்தம் 11,798 புகார் மனுக்கள் இணையதளம் மூலம் பெறப்பட்டு பரிசீலனை செய்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

## 6.1 முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முதலமைச்சரின் தனிப் பிரிவு மையத்தில் இருந்து வரும் புகார் மனுக்களை 15 நாட்களுக்குள் பரிசீலனை செய்து பதில் அளிக்கும் பொருட்டு தனிப் பிரிவினை தலைமையிடத்தில் ஏற்படுத்தியுள்ளது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை மொத்தம் 183 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளன.

## 6.2 அம்மா அழைப்பு மைய மனுக்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அம்மா அழைப்பு மையத்தில் இருந்து வரும் புகார் மனுக்களை 7 நாட்களுக்குள் பரிசீலனை செய்து பதில் அளிக்கும் பொருட்டு தனிப் பிரிவினை தலைமையிடத்தில் ஏற்படுத்தியுள்ளது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை மொத்தம் 287 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளன.

## 6.3 குறை தீர்வு மையம்

தொழில் முனைவோர் மற்றும் தொழில் முதலீட்டாளர்கள் வாரிய இசைவாணைக்கு விண்ணப்பம் செய்தல், மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சம்மந்தமான நவீன தொழில் நுட்பங்கள், தூய்மை தொழில்நுட்பங்கள் போன்றவை குறித்து விளக்கம் அளிக்கும் வண்ணம் வாரியம் பிப்ரவரி 2018–ல் வாரிய தலைமை அலுவலகத்தில், ஒரு குறை தீர்வு மையத்தினை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகின்றது. இம்மையம், பொதுமக்கள் சுற்றுச்சூழல் சம்மந்தமாக கேட்கும் விபரங்களுக்கு விளக்கம் அளித்து வருகின்றது.



## 7.0 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நிலை

தமிழகத்தில் சாயத் தொழிற்சாலைகள் மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கணிசமான ஏற்றுமதி வருவாயையும் மற்றும் அதிகளவிலான வேலைவாய்ப்புகளையும் உருவாக்குவதில் முக்கிய பங்குவகிக்கின்றன. இவை, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக இராணிப்பேட்டை, திருப்பத்தூர், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் தொகுப்பாக அமைந்துள்ள சிறுவகையான தொழிற்சாலைகளாகும். எனவே, இந்த தொழிற்சாலைகளின் சீரான இயக்கத்திற்காகவும் மற்றும் அவற்றின் தேவைக்கேற்ப கழிவுநீரை பொது சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தொகுப்பாக அமைந்திருக்கும் சிறு தொழிற்சாலைகளுக்கென பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முக்கிய பங்காற்றி வருகிறது. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்ட அறிக்கையின் மீது, இந்திய தொழில் நுட்ப கழகம், சென்னை மற்றும் அண்ணா பல்கலைகழகம் மூலமாக தொழில் நுட்ப பரிசீலனை செய்வதற்கு வாரியம்

உதவி புரிகிறது. மேலும், இவை மத்திய அரசு, மாநில அரசு மானியம் மற்றும் உறுப்பினர் தொழிற்சாலைகளின் பங்களிப்பைப் பெற்று செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில், மொத்தம் 36 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றுள் துணி சலவை மற்றும் சாய தொழிற்சாலைகளுக்கென 20 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களும், தோல் தொழிற்சாலைகளுக்கென 13 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களும், மின்முலாம் பூசும் தொழிற்சாலைகளுக்கென 2 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களும், உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதற்கு ஒரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் அமைந்துள்ளன. இவை தவிர ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள சலவை மற்றும் சாயப்பட்டறைகளுக்கென 10 புதிய பொது சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன. இவற்றுள், 5 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு நிறுவுவதற்கான இசைவாணை வாரியம் வழங்கியுள்ளது.

நீர் நிலைகளை பாதுகாக்க, பூஜ்ஜிய நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு (Zero Liquid Discharge) அமைப்பினை நிறுவுவதில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முன்னோடியாக



திகழ்கிறது. இத்தகைய அமைப்பின் மூலம் கழிவுநீர் முழுமையாக சுத்திகரிக்கப்பட்டு மறு பயன்பாடு செய்யப்படுவதால், நிலம் மற்றும் நீர் நிலைகளில் கழிவுநீர் வெளியேறுவது தவிர்க்கப்படுகிறது. மேலும், 13 தோல் தொழிற்சாலைகளுக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், தற்போது 11 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலைப்பாடு அமைப்புடன் முழுமையாக இயங்குகின்றன. மீதமுள்ள மாதவரம் மற்றும் பல்லாவரத்தில் அமைந்துள்ள 2 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் முதல் மற்றும் இரண்டாம் நிலை சுத்திகரிப்பு அமைத்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை, மாதவரம், பல்லாவரம் நகராட்சியின் சுத்திகரிக்கப்பட்ட வடிகால் கழிவுநீருடன் கலந்து வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவினை பூர்த்தி செய்து வெளியேற்ற வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

துணி சலவை மற்றும் சாய தொழிற்சாலைகளுக்கென உள்ள 20 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், 19 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (18 திருப்பூர், 1 பெருந்துறை) பூஜ்ஜிய கழிவுநீர் வெளியேற்றத்தை அடைந்துள்ளன. திருப்பூரில் உள்ள 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பூஜ்ஜிய கழிவுநீர் வெளியேற்றும் நிலையத்தினை நவீனப்படுத்துவதற்கும் மற்றும்

மேம்படுத்துவதற்கும் தமிழ்நாடு அரசு ரூ.203.29 கோடி வட்டியில்லா கடனாக வழங்கும் என அறிவிப்பு செய்தது. இதுவரை 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூ. 199.15 கோடி கைத்தறி மற்றும் ஜவுளி துறை இயக்குனர் மூலம் வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அய்யம்பேட்டை முத்தியால் பேட்டை பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய பூஜ்ய கழிவுநீர் வெளியேற்ற நிலையம் அமைப்பதற்கு திட்டம் தயாரித்து மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவி பெறுவதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது.

7.1 திறன் வாய்ந்த நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான ஆய்வுகள்

(i). தோல் தொழிற்சாலைகளின் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சேகரிக்கப்பட்டுள்ள அடர்கசடு உப்பினை அகற்ற விஞ்ஞான முறையில் தீர்வுகாண்பது தொடர்பாக, அனைத்திந்திய தோல் பதனிடும் உற்பத்தியாளர்கள் சங்கமானது (AISHTMA), மத்திய உப்பு மற்றும் கடல்சார் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனம் பாவ்நகர், குஜராத் (Central Salt & Marine Chemical Research Institute, Bhavnagar, Gujarat) நிறுவனத்தின் மூலம் ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்டது. அந்நிறுவனமானது, அடர்கசடு உப்பிலிருந்து சோடியம் குளோரைடு மற்றும் சோடியம் சல்பேட் ஆகியவற்றை பிரித்தெடுத்து அவற்றை குளோர் அல்கலி, சோடா சாம்பல் நிறுவனங்கள், காகிதம் மற்றும் காகித கூழ் உற்பத்தி நிறுவனங்களுக்கு, தங்கள் உற்பத்தியில் சோதனை முறையில் பயன்படுத்துவதற்கு அனுப்பியுள்ளது.



(ii). ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ள காட்டூர் ஏரியில் மாசடைந்துள்ள பகுதிகளை கண்டறியவும் அந்த மாசின் மூலகாரணத்தையும், அதனை களைவதற்கான வழிமுறைகளையும் கண்டறிந்து தீர்வு காண்பதற்காக தேசிய புவி இயற்பியல் ஆய்வு நிலையம், ஹைதராபாத் (National Geophysical Research Institute, Hyderabad) மூலமாக விரிவான நீர்ப்புவியியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

8.0 பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016–யை அறிவிக்கை செய்துள்ளது. 2018–19 ஆண்டு அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் 664 உள்ளாட்சி அமைப்புகளில், நாளொன்றுக்கு 1098 டன் பிளாஸ்டிக் கழிவுகள் உற்பத்தியாகின்றன. இவற்றில் 90 சதவீத பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளாட்சி அமைப்புகளால் சேகரிக்கப்பட்டு அதில்

மறுசுழற்சி பிளாஸ்டிக் பொருட்கள் மறுசுழற்சியாளர்களிடம் விற்கப்பட்டும், குறைந்த மதிப்புள்ள பிளாஸ்டிக் சாலைகள் அமைப்பதற்கும் மற்றும் மறுசுழற்சியாகாத அதிக எரிதிறன் கொண்ட பிளாஸ்டிக் பொருட்கள் சிமெண்ட் ஆலைகளுக்கு எரிபொருளாகவும் அனுப்பப்படுகிறது.

பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016 விதி 13–ன் படி, வாரியம் 91 பிளாஸ்டிக் உற்பத்தியாளர்களுக்கும், 98 பிளாஸ்டிக் மறுசுழற்சி தயாரிப்பாளர்களுக்கும் மற்றும் 8 பல அடுக்கு பிளாஸ்டிக் தயாரிப்பாளர்களுக்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை பற்றிய ஆண்டு அறிக்கையை படிவம்–VI–ல் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு சமர்ப்பிக்கின்றது.

### 8.1 தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடை அறிவிப்பு

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 110 விதியின் கீழ் 05.06.2018 அன்று சட்டமன்றப் பேரவையில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களை தயாரித்தல், சேமித்து வைத்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல் மற்றும் உபயோகித்தல் போன்றவற்றிற்கு 01.01.2019 முதல் தடை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.



தமிழக அரசு, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986, பிரிவு 5–ன் கீழ் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களின் மீதான தடை அறிவிப்பின்படி தடைசெய்யப்பட்ட பின்வரும் பிளாஸ்டிக் பொருட்கள்:–

1) உணவுப்பொருட்களை கட்ட உபயோகபடுத்தப்படும் பிளாஸ்டிக் தாள் / உறை
2) உணவு அருந்தும் மேஜையின் மீது விரிக்கப்படும் பிளாஸ்டிக் தாள்
3) தெர்மக்கோல் தட்டுகள்
4) பிளாஸ்டிக் பூசப்பட்ட காகித தட்டுகள்
5) பிளாஸ்டிக் பூசப்பட்ட காகித குவளைகள்
6) பிளாஸ்டிக் தேநீர் குவளைகள்
7) பிளாஸ்டிக் குவளைகள்
8) தெர்மக்கோல் குவளைகள்
9) பிளாஸ்டிக் பைகள் (எந்த அளவிலும், எந்த தடிமனாக இருப்பினும்)
10) பிளாஸ்டிக் பூசப்பட்ட பைகள்
11) நெய்யாத பிளாஸ்டிக் தூக்குப் பைகள்

12) பிளாஸ்டிக் தண்ணீர் பாக்கெட்கள்

13) பிளாஸ்டிக்காலான உறிஞ்சு குழாய்கள் மற்றும்

14) பிளாஸ்டிக் கொடிகள் ஆகியவை தயாரிக்கப்படுவதும், சேமித்து வைப்பதும், விநியோகிப்பதும், போக்குவரத்து செய்வதும், விற்பதும் மற்றும் உபயோகிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

### 8.2 தடையை செம்மையாக செயல்படுத்துவதற்கான அரசாணைகள்

பிளாஸ்டிக் தடையை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த தமிழக அரசால் பின்வரும் அரசாணைகள் அறிவிக்கப்பட்டன

| வ. எண் | நோக்கம் | அரசாணைகள் விவரம் |
|---|---|---|
| 1. | வழிகாட்டுதல் குழு அமைத்தல் | அரசாணை எண். 92 சுற்றுச்சூழல் மற்றும் வனத் (சு.சூ.2) துறை நாள்: 05.07.2018 |
| 2 | மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் நியமித்தல் | அரசாணை எண். 82 சுற்றுச்சூழல் மற்றும் வனத் (சு.சூ.2) துறை நாள்: 15.06.2018 |
| 3 | விழிப்புணர்வு மண்டல மாநாடு நடத்துவதற்காக ரூபாய் 54 லட்சம் ஒதுக்கீடு | அரசாணை எண். 30 சுற்றுச்சூழல் மற்றும் வனத் (சுசூ.2) துறை நாள்: 05.07.2018 |



| வ. எண் | நோக்கம் | அரசாணைகள் விவரம் |
|---|---|---|
| 4 | அனைத்து அரசு அலுவலகங்களிலும் பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் தடை ஆணையினை செயல்படுத்துதல் | அரசாணை எண். 265 சுற்றுச்சூழல் மற்றும் வனத் (சு.சூ.2) துறை நாள்: 20.09.2018 |
| 5 | மண்டல ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து செயலாற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளை நியமித்தல் | அரசாணை எண். 319 சுற்றுச்சூழல் மற்றும் வனத் (சு.சூ.2) துறை நாள்: 10.11.2018 |

### 8.3 பிளாஸ்டிக் தடையை சிறப்பாக நடைமுறைப்படுத்த மேற்கொண்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள்

பிளாஸ்டிக் தடையை சிறப்பாக நடைமுறைப்படுத்தவும், விழிப்புணர்வை உருவாக்கவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கீழ்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது.

- உணவகங்கள், திருமண மண்டபங்கள், வணிக வளாகங்கள், டாஸ்மாக் பார் நடத்தும் பிரதிநிதிகள், தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோருடன் பிளாஸ்டிக் தடை குறித்த கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன.
- மாவட்ட ஆட்சியர்களின் தலைமையின் கீழ் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைக்காக அமைக்கப்பட்ட மாவட்ட சுற்றுச்சூழல் குழுக் கூட்டங்கள் மற்றும் பெருந்திரள் விழிப்புணர்வு பேரணிகள் மாவட்டந்தோறும் நடத்தப்பட்டன.

- பிளாஸ்டிக் மாற்று பொருட்கள் கண்காட்சிகள் மாவட்ட நிர்வாகத்தால் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.
- விழிப்புணர்வு பிரச்சார ஊர்தி மாண்புமிகு தமிழக முதல்வரால் துவக்கி வைக்கப்பட்டு தமிழ் நாட்டில் 75 இடங்களில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.
- பிளாஸ்டிக் மாசு இல்லா தமிழகத்திற்கான மண்டல மாநாடுகள் பல்வேறு பங்களிப்பாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நடத்தப்பட்டது.
- ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இணைய தளம் உருவாக்குதல், பேஸ்புக், டிவிட்டர் போன்ற சமூக ஊடகங்கள் மூலமாகவும் விழிப்புணர்வு வீடியோக்கள் மற்றும் குறும்படங்கள் திரையரங்குகள் மற்றும் வணிக வாளகங்களில் திரையிடப்பட்டும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது
- தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள 45 சுங்கச்சாவடிகளில், தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் குறித்த அறிவிப்பு பதாகைகள் நிறுவப்பட்டன.
- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தன் கட்டுப்பாட்டில் உள்ள பெரிய தொழிற்சாலைகளில் பிளாஸ்டிக் தடையினை செயல்படுத்தவும் மற்றும் தொழிற்சாலை வளாகத்தை



சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டது.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பிளாஸ்டிக் பாட்டில்கள் மற்றும் அலுமினிய குவளைகளை மறுசுழற்சி செய்யும் அதிநவீன இயந்திரத்தை (Reverse Vending Buyback Machine) துவக்கி வைத்து, அவை பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டன.

### 8.4 தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்வோர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்த 52 தொழிற்சாலைகளுக்கு மூடுதல் உத்தரவு மற்றும் மின் இணைப்பு துண்டிக்கவும் வாரியத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

## 9.0 தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை

தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016–ன் படி தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உற்பத்தி செய்வோர், அக்கழிவுகளை ஆரம்ப நிலையிலேயே தவிர்த்தல், குறைத்தல், மறு உபயோகம் செய்தல், மறு சுழற்சி செய்தல், மீளப்பெறுதல், இணை செயலாக்கத்திற்கு பயன்படுத்துதல் மற்றும் பாதுகாப்பான முறையில் அகற்றுதல்

போன்ற வழிமுறைகளை கையாளவேண்டும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாள்வதற்கான அங்கீகாரத்தை தொழிற்சாலைகளுக்கு வழங்குகிறது.

தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உற்பத்தி செய்யும் 3492 தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அங்கீகாரம் (Authorisation) வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு 18.06 இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் உற்பத்தியாகின்றன. இவற்றில் 2.07 இலட்சம் டன் கழிவுகள் நில நிரப்பு (Landfill) செய்யப்படுபவை, 2.01 இலட்சம் டன் கழிவுகள் மறு சுழற்சி செய்யப்படுபவை மற்றும் 0.41 இலட்சம் டன் கழிவுகள் எரிப்பான் (Incinerator) மூலமாக எரிக்கப்படுபவை. மேலும் 13.57 இலட்சம் டன் கழிவுகள் தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்கு உகந்தவை.

தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவித பாதிப்புமின்றி விஞ்ஞான முறையில் பாதுகாப்பாக கையாளுவதற்கு தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது. தமிழ்நாட்டில் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களை, சுத்திகரிப்பு செய்து பாதுகாப்பாக நிலத்தில்



சேகரித்து வைக்கும்படியான பொது வசதிகள் (Treatment, Storage and Disposal Facilities) கும்மிடிப்பூண்டி மற்றும் விருதுநகர் ஆகிய இரண்டு இடங்களில் இயக்கத்தில் உள்ளன. துணி சாயமிடும் தொழிற்சாலைகள் மற்றும் தோல் தொழிற்சாலைகளுக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து உருவாகும் தீங்கு விளைவிக்கும் திடக்கழிவினை சிமெண்ட் தொழிற்சாலைகளில் மூலப் பொருளாகவும் மற்றும் எரிபொருளாகவும் பயன்படுத்துவதில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முன்னோடியாக விளங்குகிறது. இதுவரை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெறப்பட்ட சுமார் 2.11 இலட்சம் டன் திடக்கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலையில் மூலப் பொருள்களுடன் கலந்து சிமெண்ட் தயாரிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 10.0 திடக்கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ அறிவிக்கை செய்துள்ளது. மேற்படி உள்ளாட்சி அமைப்புகளின் கடமைகள், விதி எண் 15–ல் குறிப்பிடப்பட்டுள்ளன. விதி எண் 16ன் படி தமிழ்நாடு மாசு

கட்டுப்பாடு வாரியம், உள்ளாட்சி அமைப்புகள் மூலம் இவ்விதிகளை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 15 மாநகராட்சிகளும், 121 நகராட்சிகளும் மற்றும் 528 பேரூராட்சிகளும் உள்ளன. உள்ளாட்சி அமைப்புகளால், 2018–19ம் ஆண்டில், 13,968 டன் திடக்கழிவுகள் உற்பத்தியானதாக கூறப்பட்டுள்ளது. இவற்றில் 12850 டன் கழிவுகள் சேகரிக்கப்பட்டு அவற்றில் 7196 டன் கழிவுகள் சுத்திகரிக்கப்பட்டும், 5654 டன் கழிவுகள் நிலநிரப்பு இடங்களிலும் (Landfill Sites) நிரப்பப்பட்டது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நாளொன்றுக்கு 5 டன்களுக்கு மேல் திடக்கழிவுகளை உற்பத்தி செய்யும் 219 உள்ளாட்சி அமைப்புகளுக்கு திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி அங்கீகாரம் வழங்கியுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் புகாரின் அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை சரிவர செயல்படுத்தாத உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் குப்பை கிடங்குகள் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் நீர் மற்றும் காற்றின் தரத்தை அவ்வப்போது ஆய்வு செய்து வருகிறது. திடக்கழிவு மேலாண்மை பற்றிய ஆண்டு அறிக்கையை படிவம்–V–ல் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு சமர்ப்பிக்கின்றது.



## 11.0 மருத்துவக் கழிவு மேலாண்மை

மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் படி மருத்துவக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து சுத்திகரிப்பு செய்து அகற்றுவது, மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குவோர்களின் பொறுப்பாகும். மருத்துவமனைகள் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு இணைய வழி மூலம் அங்கீகாரம் வழங்கி, அவை விதிகளின் பல்வேறு சாராம்சங்களை கடைபிடிப்பதை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணிக்கிறது. இவ்விதிகள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க, அரசு, மாநில அளவில் ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இவ்விதிகளின் கீழ் 18,372 படுக்கை மற்றும் படுக்கையில்லா தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கும், புறநோயாளிகள் மையம், கால்நடை நிறுவனங்கள், நோயியல் ஆய்வகங்கள், இரத்த சேமிப்பு வங்கிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவ்வனைத்து மருத்துவமனைகளும் மருத்துவக்கழிவுகளை சேகரித்து, சுத்திகரிப்பு செய்து, விஞ்ஞான முறைப்படி அகற்றுவதற்கு

பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளன. தமிழ்நாட்டில் அமைந்துள்ள 11 பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களில், 8 இயக்கத்திலும், மற்ற 3 பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள், மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ஐ சரிவர பின்பற்றாததால் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் மூடப்பட்டுள்ளன. பொது சுத்திகரிப்பு நிலையங்களில் நாளொன்றுக்கு சராசரியாக 58 டன் மருத்துவக்கழிவுகள் கையாளப்படுகின்றன. மேலும் திருவள்ளூர், கடலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மேலும் மூன்று பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு நிறுவுவதற்கான இசைவாணை (CTE) வழங்கப்பட்டுள்ளது.

## 12.0 மின்னணு கழிவு மேலாண்மை

மின்னணு கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் படி, தயாரிப்பாளர்களின் (Producer of the Electrical and Electronic Equipments) நீடித்தப்பொறுப்பு (Extended Producers Responsibility) என்பதன் அடிப்படையில் மின் மற்றும் மின்னணு சாதனங்களை தயாரிப்போர், அவர்களால் தயாரிக்கும் பொருட்களால் உண்டாகும் மின்னணு கழிவுகளை ஒருமுகப்படுத்தி சேகரிப்பு செய்வது அவர்களின் பொறுப்பாகும். மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் மின் மற்றும்



மின்னணு சாதனங்கள் தயாரிப்பாளர்களுக்கு மின்னணுக் கழிவுகளை ஒரு முகப்படுத்தி சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் கையாளுவதற்கு அங்கீகாரம் வழங்கி வருகிறது. தயாரிப்பாளர்களுக்கு வழங்கிய அங்கீகாரத்தின் நிபந்தனைகளை கடைப்பிடிக்கின்றனவா என்பதை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மின் மற்றும் மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்வோர் (Manufacturers), பிரித்தெடுப்போர் (Dismantlers), மறுசுழற்சி செய்வோர் (Recyclers), சீர் செய்வோர் (Refurbisher), ஆகியோருக்கு அங்கீகாரம் வழங்கி அவ்வப்போது ஆய்வு செய்து கண்காணித்து வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பிரித்தெடுப்போர்–23, மறுசுழற்சி செய்வோர்–1 மற்றும் புதுப்பிப்போர்–1 உள்ளிட்ட 25 தொழிற்சாலைகளுக்கு இதுவரை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 13.0 கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள் 2016–யை அறிவிக்கை செய்துள்ளபடி, உள்ளாட்சி அமைப்புகள் சரியான முறையில் செயல்படுத்த வேண்டும். கட்டுமானம் மற்றும் இடிமான

கழிவுகளை சேகரித்து மறுசுழற்சி செய்யும் வசதி ஏற்படுத்துவதற்கான இடத்தை தேர்வு செய்யும்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அறிவுரை வழங்கியுள்ளது.

14.0 வாரிய ஆய்வகங்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நீர், கழிவுநீர், அன்றாடக் கழிவுநீர், மண் மாதிரிகள் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் மற்றும் தொழிற்சாலைகளின் புகைபோக்கியிலிருந்து வெளியாகும் வாயுக்களை பகுப்பாய்வு செய்து கண்காணிக்க சிறந்த உபகரணங்களுடன் கூடிய ஆய்வகங்களை மாவட்ட அளவில் நிறுவியுள்ளது. தற்சமயம் சென்னை, கோயம்புத்தூர், கடலூர், மதுரை, சேலம், திருநெல்வேலி, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய எட்டு இடங்களில் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களும் (Advanced Environmental Laboratories) அம்பத்தூர், திண்டுக்கல், ஓசூர், மணலி, மறைமலை நகர், திருப்பூர், தூத்துக்குடி மற்றும் பெருந்துறை ஆகிய எட்டு இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களும் (District Environmental Laboratories) இயங்கி வருகின்றன. அனைத்து வாரிய ஆய்வகங்களும் மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலகங்கள் மூலம் சேகரிக்கப்படும் கழிவுநீர் மாதிரிகளை



பெற்று, சுற்றுச்சூழல் காரணிகளை பகுப்பாய்வு செய்து 15 நாட்களுக்குள் அந்தந்த மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலகங்களுக்கு அறிக்கை அளிக்கின்றன. குறிப்பிட்ட இடைவெளியில் தொழிற்சாலைகளின் காற்றின் தரம் மற்றும் வாயுக் கழிவு நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவிற்குள் உள்ளனவா என ஆய்வகங்கள் மூலம் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

சென்னை, கோயம்புத்தூர், கடலூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய ஐந்து இடங்களில் அமைந்துள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு சோதனை மற்றும் அளவீட்டு திருத்தங்களுக்கான அங்கீகாரம் தேசிய ஆய்வக அங்கீகார வாரியத்திடமிருந்து (NABL) பெறப்பட்டுள்ளது. சென்னை, சேலம் மற்றும் கடலூர் ஆகிய மூன்று இடங்களில் உள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு OSHAS 18001 தர சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை, நீர், வடிகால் கழிவு நீர் மற்றும் தொழிற்சாலை கழிவு நீர் ஆகியவற்றின் 21,209 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இந்த ஆய்வகங்கள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் 818 தொழிற்சாலைகளிலிருந்து புகைபோக்கி கண்காணிப்பு மற்றும் சுற்றுப்புற காற்று தர ஆய்வு, ஆய்வகங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

## 14.1 நீர் தர கண்காணிப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், உள்நாட்டு நீரின் தரத்தினை இரண்டு பெரிய திட்டங்களான உலக அளவிலான சுற்றுபுறச்சூழல் கண்காணிப்பு திட்டம் (Global Environmental Monitoring System) மூலமும், இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு திட்டம் (Monitoring of Indian National Aquatic Resources System) மூலமும் கண்காணித்து வருகின்றது. இத்திட்டங்களின் கீழ் காவிரி, தாமிரபரணி, பாலாறு மற்றும் வைகை ஆகிய நான்கு நதிகள் மற்றும் உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வீராணம், போரூர், பூண்டி, பழவேற்காடு மற்றும் செங்குன்றத்தில் உள்ள எட்டு ஏரிகளின் நீரின் தன்மை கண்காணிக்கப்பட்டு வருகிறது. தற்சமயம், இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு திட்டத்தின் கீழ், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நிதி உதவியுடன் 79 இடங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அப்பகுப்பாய்வு அறிக்கைகள் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.



## 14.2 நீர் தர கண்காணிப்பு மையம்

சென்னையில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் நீர் தர கண்காணிப்பு மையத்தினை (Water Quality Watch Centre) வாரியம் அமைத்துள்ளது. தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் தரம் இணைய வழி மூலம் 24x7 நேரமும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இம்மையத்தின் மூலம் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீரின் அளவு (Flow), மொத்த கரைந்துள்ள உப்பு (TDS), அமில கார சமநிலை (pH), பிராணவாயு தேவை (BOD), வேதியியல் பிராணவாயு (COD), மிதக்கும் நுண்துகள்கள் (TSS) ஆகிய காரணிகளும் மற்றும் தொழிற்சாலைக்கு சம்மந்தமான குறிப்பிட்ட பிற காரணிகளும் கண்காணிக்கப்படுகின்றன. ஜனவரி 2020 வரை, 17 வகையான அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள், சிகப்பு வகை பெரிய தொழிற்சாலைகள் மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆக மொத்தம் 343 தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## 14.3 தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள்

ஆறுகள் மற்றும் நீர்நிலைகளின் தரத்தினை தொடர்ந்து கண்காணிக்கும் வகையில் வாரியம், சாயத் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள திருப்பூர், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் காவிரி, நொய்யல் மற்றும் காளிங்கராயன் வாய்க்கால் பகுதிகளில் தலா மூன்று தொடர் நீர்தர கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது. இதேபோன்று தாமிரபரணி மற்றும் பவானி ஆற்றிலும் மூன்று இடங்களில் கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது.

இந்நிலையங்களின் மூலம் நீரின் அமில கார சமநிலை, மொத்த கரைந்துள்ள திடப் பொருட்கள், கரைந்துள்ள பிராண வாயு அளவு ஆகிய காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

## 14.4 சென்னை நீர் வழிகள் தர கண்காணிப்பு திட்டம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னையில் உள்ள அடையாறு, பக்கிங்காம் கால்வாய், கூவம் மற்றும் ஓட்டேரி கால்வாய் ஆகியவற்றின் நீரின் தன்மையை மாதந்தோறும் நீர் மாதிரி சேகரித்து பகுப்பாய்வு செய்து வருகின்றது. மொத்தம் 30 இடங்களில் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன.



## 14.5 சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் 28 இடங்களில் சுற்றுப்புற காற்றின் தரத்தினை தேசிய காற்று மண்டல கண்காணிப்பு திட்டத்தின் கீழ் மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய நிதி உதவியுடன் கண்காணித்து வருகிறது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி, தூத்துக்குடி, மேட்டூர் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் சுற்றுப்புற காற்றுத்தர கண்காணிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வாரத்திற்கு இரண்டு முறை 24 மணி நேரமும் காற்றின் தரம் கண்காணிப்பு செய்யப்படுகிறது. இந்த கண்காணிப்பு நிலையங்கள் காற்றில் கலந்துள்ள 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், சல்பர்–டை–ஆக்ஸைடு, நைட்ரஜன்–டை–ஆக்ஸைடு மற்றும் அம்மோனியா ஆகியவற்றை கண்காணிக்கின்றன. மேலும், இத்தகவல்கள் வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுகின்றன.

## 14.6 தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள்

சுற்றுப்புற காற்று தரத்தினை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம், வாரியமானது தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை

(Continuous Ambient Air Quality Monitoring Stations) சென்னையில் கோயம்பேடு, ராயபுரம், பெருங்குடி, கொடுங்கையூர், ஆகிய இடங்களிலும் மற்றும் கும்மிடிப்பூண்டி, தூத்துக்குடி, பெருந்துறை சிப்காட் வளாகங்களில், கோயம்புத்தூர் சிட்கோ வளாகத்திலும் நிறுவியுள்ளது. இந்த கண்காணிப்பு நிலையங்கள் காற்றில் கலந்துள்ள 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், சல்பர் டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு, ஒசோன், கார்பன் மோனாக்ஸைடு, பென்சீன் மற்றும் எளிதில் ஆவியாகும் கரிம சேர்மங்கள் (Volatile Organic Compounds) ஆகியவற்றை கண்காணிக்கின்றன. மேலும் வாரியம் சென்னையின் முக்கிய இடங்கள் மற்றும் இதர பகுதிகளில் காற்று தரத்தினை கண்காணிக்கும் வண்ணம் ஒரு நடமாடும் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையத்தினை இயக்கி வருகிறது. இதுதவிர தமிழ்நாட்டின் வெவ்வேறு நகர்ப்புற மற்றும் தொழிற்சாலை பகுதிகளில் மொத்தம் 25 இடங்களில், சுற்றுப்புற காற்று தரத்தினை தொடர்ந்து கண்காணிப்பு செய்ய 25 நிலையங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டுவருகின்றன.



### 14.7 காற்று தர கண்காணிப்பு மையம்

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் புகை மற்றும் சுற்றுப்புற காற்று தரத்தினை 24x7 நேரமும் கண்காணிக்கும் பொருட்டு வாரியம், சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்தில் காற்று தர கண்காணிப்பு நிலையத்தை (Care Air Centre) அமைத்துள்ளது. இம்மையத்தின் மூலம் 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள் ($PM_{2.5}$), 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள் ($PM_{10}$), கந்தக–டை–ஆக்ஸைடு ($SO_2$), நைட்ரஜன் ஆக்ஸைடு ($NO_x$) மற்றும் அந்தந்த தொழிற்சாலைக்கென குறிப்பிடப்பட்ட மாசு காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. ஜனவரி 2020 நிலவரப்படி 615 தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டு புகை மாசின் அளவு மற்றும் சுற்றுப்புறக் காற்று மாசின் அளவு கண்காணிப்பட்டு வருகிறது. மாசின் அளவு அதிகரிக்கும் போது மற்றும் இணைப்பு துண்டிக்கப்படும் போது குறுஞ்செய்தி (SMS) மற்றும் மின்னஞ்சல் (E–mail) மூலம் தொழிற்சாலைகளுக்கும், மாவட்ட அலுவலர்களுக்கும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கான தகவல் உடனுக்குடன் அனுப்பப்படுகிறது.

### 14.8 தேசிய சுற்றுப்புற ஒலி அளவு கண்காணிப்பு திட்டம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியமும் இணைந்து சென்னையில் 10 இடங்களில் சுற்றுப்புற ஒலி அளவினை தொடர்ந்து கண்காணிக்கும் கருவிகளை பொருத்தி ஒலி அளவினை பதிவு செய்து வருகின்றது. இந்நிலையங்கள் எழும்பூர், தியாகராயநகர், பெரம்பூர், கிண்டி, திருவல்லிக்கேணி, பள்ளிக்கரணை, வேளச்சேரி, வண்ணாரப்பேட்டை, அண்ணாநகர் மற்றும் சவுகார்பேட்டை ஆகிய இடங்களில் உள்ளன. மேலும், இத்தகவல்கள் மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

### 15.0 சட்ட நடவடிக்கைகள்

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் பிரிவு 33 A மற்றும் 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் பிரிவு 31 A–ன் படி மாசினைக் கட்டுப்படுத்த தவறும் / தவறிழைக்கும் தொழிற்சாலைகளின் மீது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சட்ட நடவடிக்கைகளான மூடுதல் மற்றும் மின் இணைப்பு துண்டித்தல் ஆகியவற்றை மேற்கொண்டுவருகிறது.



ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 17,851 தொழிற்சாலைகளிடம் முகாந்திரம் கோரப்பட்டுள்ளது. மேலும் 482 தொழிற்சாலைகளுக்கு ஆலை மூடுவதற்கான மற்றும் மின் இணைப்பினை துண்டிப்பதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

குறைகளை நிவர்த்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு மூடுதல் உத்திரவினை ரத்து செய்து மீண்டும் மின் இணைப்பு கொடுப்பதற்கும் வாரியம் உத்தரவிடுகிறது. நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981–ன் கீழ் வாரியம் வழங்கிய மூடுதல் உத்தரவு மற்றும் இதர உத்தரவினால் இடருற்ற தொழிற்சாலைகள் வாரியத்தின் மேல்முறையீட்டு ஆணையம் மற்றும் மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் ஆகியவற்றை அணுகலாம்.

### 15.1 மாண்புமிகு மேல்முறையீட்டு ஆணையம்

மாண்புமிகு மேல் முறையீட்டு ஆணையம் (Hon'ble Appellate Authority), மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் தலைமையின் கீழ் இரண்டு தொழில்நுட்ப உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. 1974–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு

மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 1988, பிரிவு 25, 26 மற்றும் 27 குறிப்பாக, 1981–ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 1987, பிரிவு 21–ன் கீழ் மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எந்தவொரு நபரும், மேற்கூறிய ஆணையத்திடம் மேல்முறையீடு செய்யலாம்.

### 15.2 மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாயம்

மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென் மண்டலம் சென்னையில் இயங்கி வருகிறது. நீர் (மாசு தடுப்பும் மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974–ன் பிரிவு 28, 29 மற்றும் 33 A–ன் கீழ் மற்றும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1987 பிரிவு 5–ன் கீழ் மேல்முறையீட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் / மாநில அரசால் வழங்கப்படும் உத்தரவால் இடருற்ற எந்த ஒரு நபரும் வாரியம் / மாநில அரசு/ மேல்முறையீட்டு ஆணையம் உத்தரவு பிறப்பித்த 30 நாட்களுக்குள் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம்.



### 15.3 தகவல் அறியும் உரிமை சட்டம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மீது பெறப்படும் விண்ணப்பங்களை கையாளுவதற்கென தனிபிரிவுடன் இயங்கி வருகிறது. தமிழ்நாடு அரசின் ஆணையின் படி வாரிய தலைமை அலுவலகத்தில் இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளரையும் மண்டல அலுவலகங்களில் இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் (கண்காணிப்பு), மாவட்ட அலுவலகங்களில் உள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் ஆய்வகங்களின் தலைமை அலுவலர்கள் ஆகியோரை தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் கோரப்படும் தகவல்களை அளிக்க பொது தகவல் அலுவலர்களாக வாரியம் நியமித்துள்ளது. வாரிய அலுவலகத்தில் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் மேல்முறையீட்டு அலுவலராக நியமிக்கப் பட்டுள்ளார். ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 1446 விண்ணப்பங்களின் மீது வாரியம் தகவல்களை வழங்கியுள்ளது.

## 16.0 மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாய வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கிழ்கண்ட செயல்பாடுகளை செய்து வருகிறது

### 16.1 சுற்றுச்சூழல் மாசு குறியீடு

மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் நாடு தழுவிய அளவில் நடத்திய சுற்றுச்சூழல் தர கண்காணிப்பு ஆய்வின் அடிப்படையில் தமிழ்நாட்டில் வேலூர், கடலூர், மணலி, கோயம்புத்தூர், திருப்பூர், மேட்டூர், ஈரோடு மற்றும் தூத்துக்குடி ஆகிய எட்டு பகுதிகள் கடுமையான மாசினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை பருவநிலை மாற்ற அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் மேற்குறிப்பிட்ட 8 பகுதிகளில் ஆய்வு செய்து சுற்றுச்சூழல் மாசு குறியீடு (Comprehensive Environmental Pollution Index) அளவினை வெளியிட்டது. இதன் பொருட்டு மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயமானது தனது 14.11.2019ல் வெளியிட்ட ஆணையின் படி (O.A.No. 1038/2018) மேற்குறிப்பிட்ட 8 இடங்களை மேம்படுத்துவதற்கான செயல்திட்டங்களை 31.01.2020குள் சமர்ப்பிக்க உத்தரவிட்டது. தேசிய பசுமை



தீர்ப்பாயமானது இந்த 8 பகுதியில் உள்ள சிவப்பு மற்றும் ஆரஞ்சு வகை புதிய தொழிற்சாலைகளை நிறுவவும், விரிவுபடுத்தவும் தடைவிதித்துள்ளது.

தமிழ்நாட்டு மாசு கட்டுப்பாடு வாரியம் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் நீர் மற்றும் காற்று மாதிரிகளை சேகரித்து அதனை ஆய்வு செய்து சுற்றுச் சூழல் மாசு குறியீடு (CEPI) அளவினை கண்டறிந்துள்ளது. மேலும் மேற்குறிப்பிட்ட இடங்களை மேம்படுத்துவதற்கான செயல்திட்டங்களை 28.01.2020 அன்று மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு சமர்ப்பித்தது. மேலும் இப்பகுதிகளின் மீது இருந்த தடையினை நீக்க பரிந்துரை செய்துள்ளது.

### 16.2 சுற்றுச்சூழல் இழப்பீடு

மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம், மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (Hon'ble National Green Tribunal) அசல் மனு எண். 710 முதல் 713/2017 மற்றும் அசல் மனு எண். 593/2017 (முன்னதாக உச்சநீதி மன்றத்தின் W.P.(Civil) எண்.375/2012–ன்படி) தொழிற்சாலைகள், மருத்துவமனைகள் (Health Care Facilities) மற்றும் பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் (Common Bio Medical Waste Treatment Disposal Facility) சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு

ஏற்படுத்தியிருப்பின், அதனை மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்கிய முறைப்படி மதிப்பீடு செய்து இழப்பீட்டுத் தொகையை விதி மீறுவோரிடமிருந்து வசூலித்து அதனை சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட சேதத்தினை மீட்டெடுக்கவும் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு பயன்படுத்தவும் அனைத்து மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

16.3 சுத்திகரிக்கப்பட்ட அன்றாட கழிவுநீரை மறுபயன்பாட்டிற்கான செயல் திட்டம்

புது டெல்லியிலுள்ள மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாய ஆணையின்படி, தமிழ்நாட்டில் அமைந்துள்ள நகராட்சி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளிவரும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகள் மற்றும் பிற மறுபயன்பாட்டிற்கான செயல் திட்டத்தினை தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தயார் செய்துள்ளது. இதனை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு சமர்ப்பித்துள்ளது.

16.4 மாசடைந்த நதி பகுதிகள் பற்றிய குறிப்பு

தமிழ்நாட்டில் 6 நதிகளின் சில பகுதிகளை உயிர் வேதியியல் ஆக்ஸிஜன் தேவை (BOD) காரணி அடிப்படையில் மாசடைந்த பகுதிகளாக கண்டறிந்து மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் ஐந்து வகைகளாக பிரித்துள்ளது



(முன்னுரிமை–I– BOD>30மிகி/லி, முன்னுரிமை–II– BOD 20-30 மிகி/லி, முன்னுரிமை–III–BOD 10-20 மிகி/லி, முன்னுரிமை–IV– BOD 6-10 மிகி/லி, முன்னுரிமை–V– BOD 3-6 மிகி/லி).

1. சரபங்கா நதி – தாத்தையம்பட்டி முதல் டி.கொனங்கபாடி வரையுள்ள பகுதி – (15 கிமீ) – முன்னுரிமை – I
2. திருமணிமுத்தாறு நதி – சேலம் முதல் பாப்பாரப்பட்டி வரையுள்ள பகுதி – (15 கிமீ) – முன்னுரிமை – I
3. வசிஷ்டா நதி – மணிவிழுந்தான் முதல் தியாகனூர் வரையுள்ள பகுதி – (10 கிமீ) – முன்னுரிமை – I
4. காவிரி நதி – மேட்டூர் முதல் மயிலாடுதுறை வரையுள்ள பகுதி – (200 கிமீ) – முன்னுரிமை – I
5. பவானி நதி – சிறுமுகை முதல் காளிங்கராயன் வரையுள்ள பகுதி – (60 கிமீ) – முன்னுரிமை – IV
6. தாமிரபரணி நதி – பாப்பன்குளம் முதல் ஆறுமுகநேரி வரையுள்ள பகுதி – (80 கிமீ) – முன்னுரிமை – V

நதிகளின் மாசுபாட்டிற்கு, உள்ளாட்சி அமைப்புகள் சுத்திகரிக்கப்படாத நகராட்சி கழிவுநீர் மற்றும் நகராட்சி

திடக்கழிவுகளை நீர்நிலைகளில் கொட்டுவதே முக்கிய காரணமாகும். இதனிடையே மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் தாமாகவே முன்வந்து தொடுத்த நதி நீர் மாசு குறித்த வழக்கில் O.A. No. 673/2018, 20.09.2018 மற்றும் 19.12.2018 நாளிட்ட ஆணைகள் பின்வருமாறு:

"..............நாட்டிலுள்ள நதிகளின் மாசடைந்த பகுதிகளை மீட்டெடுத்து குறைந்தபட்சம் குளிப்பதற்கு ஏதுவான நீரின் தரத்திற்கு கொண்டு வருவற்கான திட்ட அறிக்கையினை அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களும் தயார் செய்ய வேண்டும்".

அதன்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மேற்குறிப்பிட்ட 6 மாசடைந்த நதிநீர் பகுதிகளில் மாசினை நீக்க வேண்டிய நடவடிக்கை குறித்து செயல் திட்ட அறிக்கையை இறுதி செய்து மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு சமர்ப்பித்துள்ளது. மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் அங்கீகரிக்கப்பட்ட செயல் திட்ட அறிக்கையின்படி, மாசடைந்த ஆறுகளில் அன்றாட கழிவுநீர் கலக்காமல் இருக்கவும், திடக்கழிவு மேலாண்மை மற்றும் மாசடைந்த நதியை தூய்மைப்படுத்தவும் செயல் திட்டங்கள், தொடர்புடைய அரசு துறைகளின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



16.5 காற்றுதர குறியீடுகளை அடையாத நகரங்களை பற்றிய குறிப்பு

2011–2015 ஆண்டிற்கான கண்காணிக்கப்பட்ட ஆய்வின்படி, தமிழ்நாட்டில் உள்ள தூத்துக்குடி உள்ளடக்கிய இந்தியாவின் 102 நகரங்களை காற்று தர குறியீடுகளை அடையாத நகரங்களாக மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் கண்டறிந்துள்ளது. அசல் மனு எண். 681/2018–ன் மீதான மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் வழங்கிய 08.10.2018 நாளிட்ட தீர்ப்பில் பல்வேறு அரசு துறைகளுடன் இணைந்து தூத்துக்குடி நகரத்தின் காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கான செயல்திட்டத்தை தயாரித்து இறுதி செய்து அனுப்ப அறிவுறித்தியது. அதன்படி திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அதற்கு மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் ஒப்புதல் வழங்கியது. தூத்துக்குடி நகரத்திற்கான அச்செயல்திட்டம் பல்வேறு துறைகளுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் 06.08.2019 நாளிட்ட ஆணையின்படி திருச்சி நகரத்தையும் காற்று மாசடைந்த பகுதியாக கண்டறியப்பட்டு காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கான செயலாக்க திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்துள்ளது.

## 17.0 சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் (ETI) வாரியத்தில் பணிபுரிவோர், தொழிற்சாலை பிரதிநிதிகள், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் செயல் அலுவலர்கள், தொடர்புடைய துறைகள் மற்றும் அரசு சாரா அமைப்பின் பிரதிநிதிகளுக்கு மாசு கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகளை அளித்து வருகிறது.

ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் கீழ்கண்ட பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | பயிற்சி திட்டங்கள் | பயனாளர்கள் | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடை | இந்து சமய மற்றும் அறநிலையத்துறை, உணவு மற்றும் பாதுகாப்புத்துறை மற்றும் மாவட்ட டாஸ்மாக் அதிகாரிகள் | 90 |
| 2. | மின்னனு கழிவு மேலாண்மை | அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பாளர்கள், பிரித்தெடுப்பவர்கள், உற்பத்தியாளர்கள், | 123 |



| வ. எண் | பயிற்சி திட்டங்கள் | பயனாளர்கள் | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | | மறுசுழற்சியாளர்கள் மற்றும் புதுப்பிப்பவர்கள் | |
| 3. | மருத்துவ கழிவு மேலாண்மை | சென்னை, அப்போலோ மருத்துவமனையின் மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த ஊழியர்கள் | 22 |
| 4. | திடக்கழிவு மேலாண்மை – பயோமைனிங் | மாநகராட்சிகள், நகராட்சி ஆணையர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் | 410 |
| 5. | திடக்கழிவு மேலாண்மை மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை | பேரூராட்சியின் செயல் அலுவலர்கள் | 520 |
| 6. | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் செயல்பாடுகள் | 11 இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள், 5 துணைஆட்சியர்கள், தலைமை செயலகத்தை சேர்ந்த 40 பிரிவு அலுவலர்கள் மற்றும் | 72 |

| வ. எண் | பயிற்சி திட்டங்கள் | பயனாளர்கள் | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | | தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுகாதார துறையை சேர்ந்த 16 உதவி இயக்குனர்கள் | |
| 7. | வாகனப் புகை கண்காணிப்பு | "மாசு கட்டுக்குள் உள்ளது" சான்று வழங்கும் மையங்களை இயக்குபவர்கள் | 226 |

## 18.0 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்வேறு வகையான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை போகிப் பண்டிகை, உலக சுற்றுச்சூழல் தினம், விநாயகர் சதுர்த்தி, தீபாவளி பண்டிகை மற்றும் திருவண்ணாமலை கார்த்திகை மகாதீபம் ஆகியவற்றின் போது ஊர்வலம், சுற்றுச்சூழல் வினாடி வினா, மரம் நடுதல், ஆட்டோ ரிக்ஷா மூலம் பரப்புரை, துண்டுப் பிரசுரங்கள், பொது இடங்களில் அறிவிப்பு பலகைகள், பன்பலை வானொலியில் ஒலிபரப்புதல் மற்றும் காணொளி ஊடகங்கள் மூலமாக குறும்படங்கள் வெளியிடுதல் ஆகியவற்றை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது.



## 18.1 அரசு பொருட்காட்சிகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை தீவுத்திடலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் அரசு பொருட்காட்சியிலும் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் நடத்தப்படும் அரசு பொருட்காட்சிகளிலும் சிறப்பாக பங்கேற்று வருகின்றது. இப்பொருட்காட்சிகளில் வாரியம் அரங்கம் அமைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்கள், திடக்கழிவு மேலாண்மை பற்றிய மாதிரி வடிவமைப்புகள், மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

## 18.2 பசுமை விருதுகள்

மாவட்ட ஆட்சியர்கள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு நலச்சங்கங்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வில் ஏற்படுத்தும் சிறந்த பங்களிப்பினை அங்கீகரிக்கும் விதமாக பசுமை விருதுகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது. ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மீதான நடவடிக்கை தடையை சிறந்த முறையில்

செயல்படுத்திய மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டது.

**19.0 மாசு குறைப்பு திட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிதி**

தமிழ்நாட்டின் சுற்றுச்சூழல் தரத்தினை மேம்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பிற அரசு துறைகளுக்கு நிதி வழங்கி மாசு குறைப்பு திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறது.

இதற்காக வாரியம் விடுவித்த தொகை தொடர்பான விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

| வ. எண் | திட்டங்களின் விவரம் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 19.1 | மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு அதிக அளவிலான மரங்களை நடுவதற்கான நிதி | அரசாணை 2 (டி) எண். 49 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை நாள்: 03.12.2019–ல் தமிழக அரசு ரூ.13.40 கோடி அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாரிய நிகழ்வாணை எண். 83, நாள்: 30.12.2019–ன் மூலம் முதல் தவணையாக ரூ.6.7 கோடி முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அவர்களுக்கு வழங்கியுள்ளது. |



| வ. எண் | திட்டங்களின் விவரம் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 19.2 | செங்கல்பட்டு மாவட்டம் சிட்லபாக்கம் ஏரியின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ரூ.25 கோடி அரசாணை (டி) எண். 283, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள்:25.10.2019–ன் அடிப்படையில் சுற்றுச்சூழல் துறைக்கு வழங்கியுள்ளது. |
| 19.3 | ஈரோடு மாவட்டம் பவானி ஒன்றியத்தில் அமைந்துள்ள ஓடத்துறை ஏரியின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு | அரசாணை (நிலை) எண். 294 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை நாள்: 04.11.2019–ன்படி, ஈரோடு மாவட்டம் பவானி ஒன்றியத்தில் அமைந்துள்ள ஓடத்துறை ஏரியின் சுற்றுச் சூழல் மறு சீரமைப்பிற்காக ரூ.3.20 கோடி நிதியை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அளிக்கப்பட்டுள்ளது. |
| 19.4 | மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர் 2018–2019 சட்டமன்ற பேரவையில் அறிவித்த அறிவிப்பின்படி, சென்னை மாநகராட்சியில் நகர வனவியல் உருவாக்குதல் | சென்னை வனக்கோட்ட மாவட்ட வன அலுவலர் (District Forest Officer) அவர்களுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாரிய நிகழ்வாணை எண். 69, நாள்: 26.11.2019–ன்படி 11.12.2019 அன்று ரூ.139 லட்சம் அளிக்கப்பட்டுள்ளது. |

| வ. எண் | திட்டங்களின் விவரம் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 19.5 | ஒரு மாவட்டத்திற்கு தலா ரூ.2.00 இலட்சம் செலவில் 32 மாவட்டங்களுக்கு தேசிய பசுமைப்படை, சுற்றுச்சூழல் மன்றங்கள் மற்றும் மாணவ மாணவியர்க்கு சுற்றுச்சூழல் போட்டிகள் மற்றும் சுற்றுச்சூழல் முகாம்களை நடத்துவதற்காக | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ரூ.64 இலட்சம் அரசாணை (டி) எண். 34, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள்:14.10.2019–ன் அடிப்படையில் சுற்றுச்சூழல் துறைக்கு வழங்கியுள்ளது. |
| 19.6 | மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர் 2019–20 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்புகளின்படி, தமிழ்நாடு மாநில பருவநிலை மாற்றம் தகவல் பரவல் சேவைகள் (டி.என்.எஸ்–சி.ஐ.டி.எஸ்) | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ரூ.8 இலட்சம் அரசாணை (டி) எண். 278, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள்: 23.10.2019–ன் அடிப்படையில் சுற்றுச்சூழல் துறைக்கு வழங்கியுள்ளது. |
| 19.7 | மின்னணு கழிவுகள் மேலாண்மை தொடர்பாக பள்ளி ஆசிரியர்கள் மற்றும் இதர பங்குதாரர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட நிதி | மின்னணு கழிவுகள் மேலாண்மை தொடர்பாக பள்ளி ஆசிரியர்கள் மற்றும் இதர பங்குதாரர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாரிய நிகழ்வானை எண். 76, நாள்: 29.11.2019–ன்படி வாரியத்தின் மாவட்ட அலுவலகங்களுக்கு தலா ரூ.1.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.38.00 இலட்சம் வழங்கியுள்ளது. |



| வ. எண் | திட்டங்களின் விவரம் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 19.8 | மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி சுற்றுச்சூழல் துறை இயக்குனரகம் மூலமாக கடலோர முகத்துவாரங்கள் மற்றும் ஏரிகளில் மைக்ரோ பிளாஸ்டிக் பொருட்கள் பற்றிய மதிப்பீடு தொடர்பான ஆய்வு | வாரிய நிகழ்வாணை எண். 15, நாள்: 21.02.2020–ன்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ரூ.81.2 இலட்சம் அனுமதி அளித்து ரூ.25.40 இலட்சங்களை 2019–2020 ஆண்டுக்காக தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. |
| 19.9 | பிளாஸ்டிக் கழிவுகளின் தீய விளைவுகள் குறித்து விழிப்புணர்வு பரப்புரை "நடமாடும் செய்தி" (Message on Wheels) மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி சுற்றுச்சூழல் துறை இயக்குனரகம் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்துதல் | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாவட்டத்திற்கு ரூ.2 இலட்சம் வீதம் ரூ.64.00 இலட்சங்களை வாரிய நிகழ்வாணை எண்.75, நாள்:28.11.2019–ன்படி உறுப்பினர் செயலர், தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. |

## 20.0 நிலைத்தகு நீடித்த வளர்ச்சி இலக்குகள்

அனைத்து மக்களும் அமைதி மற்றும் செழிப்பான வளம் ஆகியவற்றை அனுபவித்து மகிழ ஏதுவாக ஏழ்மை நிலையை முடிவுக்கு கொண்டுவருதல் மற்றும் புவியினை காத்தல் ஆகியவற்றை இலக்குகளாக அமைத்து பன்னாட்டு

அரசுகள் ஒப்புக்கொண்டபடி இந்தியா ஒப்புகையிட்டு நிலைத்தகு நீடித்த வளர்ச்சியினை இலக்காக (Sustainable Development Goals) கொண்டுள்ளது. செப்டம்பர் 2015ல் நடந்த பன்னாட்டு கூட்டத்தில் 17 இலக்குள் மற்றும் 169 குறி இலக்குகள் நிலைத்தகு நீடித்த வளர்ச்சி இலக்குகளாக தீர்மானிக்கப்பட்டுள்ளன.

நிலைத்தகு நீடித்த வளர்ச்சி இலக்கு குறியீடு (6.3.2)–ல் நிர்ணயித்துள்ளபடி மாசினை குறைத்து நீரின் தரத்தை மேம்படுத்தவும், கழிவுகளை கொட்டுவதை முற்றிலுமாக நீக்கவும், தீங்குவிளைவிக்கும் வேதி பொருட்கள் வெளியிடுவதை குறைக்கவும், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் வெளியேற்றப்படுவதை பாதியாகக் குறைக்கவும் மற்றும் குறிப்பிடும்படி மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு, கழிவுநீர் சுத்திகரிப்பு கடைப்பிடிக்கும் தொழிற்சாலைகளை அதிகரித்தல் ஆகியவற்றை 2030 ஆம் ஆண்டுக்குள் அடைய நிலைத்தகு வளர்ச்சி இலக்கு குறியீடாக (6.3) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனைத்து அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் கழிவுநீரை சுத்திகரித்து மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு செய்து கழிவுநீர் வெளியேற்றா நிலையினை அடைய வலியுறுத்துகிறது.



நிலைத்தகு நீடித்த வளர்ச்சி இலக்கு, மேலும் ஒரு குறியீட்டில் (12.4.2) தர கண்காணிப்பு நிலையங்களை மாநிலம் முழுக்க ஏற்படுத்தி தர கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் எனவும், பன்னாட்டு அளவில் ஒப்புக்கொண்ட கட்டமைப்புகளுக்கேற்ப வேதி பொருட்களை சுற்றுச்சூழல் பாதிக்காமல் மேலாண்மை செய்யவும் மற்றும் கழிவுகளை அவற்றின் வாழ்நாள்சுழற்சி முழுக்க சுற்றுச்சூழல் பாதிக்காமல் மேலாண்மை செய்யவும் மற்றும் கழிவுகள் காற்று, நீர் மற்றும் நிலம் ஆகியவற்றில் வெளியேற்றப்படுவதை குறிப்பிடும்படியான அளவில் குறைத்து சுற்றுச்சூழல் மற்றும் மக்கள் நலனில் ஏற்படும் பாதிப்பினை 2030 ஆம் ஆண்டுக்குள் குறைக்க வேண்டும் என இலக்கு (12.4) நிர்ணயித்துள்ளது. 2020–2021 ஆண்டில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 25 தொடர் காற்றுத்தர கண்காணிப்பு நிலையங்கள் மற்றும் 24 ஆட்கள் மூலம் செயல்படும் (Manual) கண்காணிப்பு நிலையங்கள் (Manual Monitoring Stations) கூடுதலாக ஏற்படுத்தி சுற்றுப்புற காற்றுத்தர கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கையை 38–லிருந்து 87 ஆக உயர்த்தி தமிழ்நாடு முழுவதும் அமைக்க உத்தேசித்துள்ளது. 2020–2021 ஆண்டில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 6 நீர் தர கண்காணிப்பு நிலையங்களை கூடுதலாக அமைத்து நீர் தர கண்காணிப்பு

நிலையங்களின் எண்ணிக்கையை 79—லிருந்து 85 ஆக உயர்த்தி தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களின் தரத்தினை கண்காணிக்க உத்தேசித்துள்ளது.

நிலைத்தகு நீடித்த வளர்ச்சி இலக்கு 13.3—ல் 13.3.1.2 குறியீட்டில் குறிப்பிட்டுள்ளபடி கல்வி அறிவினை மேம்படுத்துதல், விழிப்புணர்வை அதிகரித்தல், பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தல், தழுவுதல், தாக்கத்தை குறைத்தல் மற்றும் தொழில்நுட்ப மாற்றம் ஆகியவற்றில் தனிநபர் மற்றும் அமைப்பின் தரத்தை உயர்த்துதல் முதலியன மாநில அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த இலக்கினை அடைய தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் விழாக்காலங்களில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

## 21.0 தொழில் மேற்கொள்ள எளிய வழிகள்

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் மூலமாக திட்டங்களுக்கு ஒருங்கிணைந்த முறையில் கொள்கை அளவில் ஒப்புதல் வழங்க ஒற்றைச்சாளர அமைப்பினை ஏற்படுத்தியுள்ளது. இந்நிறுவனம், உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டினை (Global Investors Meet) நடத்தி உலக அளவிலான



முதலீடுகளை ஈர்ப்பதற்கு உரிய முகமை நிறுவனமாகும். இதன் கீழ் (Global Investors Meet) ஜனவரி 2020 பதிவு செய்த 70 தொழிற்சாலைகளுக்கு மற்றும் ஒற்றைச்சாளர அமைப்பின் மூலம் ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை விண்ணப்பித்த 23 தொழிற்சாலைகளுக்கும் வாரியம் இதுவரை இசைவாணை வழங்கியுள்ளது.

## 22.0 காவிரி டெல்டா பகுதி-சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986—ன் கீழ் சில வகை புதிய தொழிற்சாலைகள் அமைக்க தடை செய்தல்

தமிழ்நாடு அரசு, அரசாணை (நிலை) எண். 21 சுற்றுச்சூழல் மற்றும் வனத் (EC.3) துறை நாள்: 24.02.2020—ல் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும், சுற்றுச்சூழல் மென்தன்மையுடைய காவிரி டெல்டா பகுதியின் விவசாய மண்டலத்தை பாதுகாக்க ஆணை பிறப்பித்துள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு, அறிவிக்கை எண்.II (2)/சு.வ/148(j)/2020 நாள் 24.02.2020 வெளியிட்டு தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம், கடலூர் மாவட்டத்தில் உள்ள குமராட்சி, காட்டுமன்னார் கோவில், மேல்புவனகிரி, கீரப்பாளையம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கரம்பக்குடி, அறந்தாங்கி, ஆவுடையார் கோவில், மனமேல்குடி, திருவரங்குளம் ஊராட்சி

ஒன்றியங்களில் புதியதாக நிறுவப்படவுள்ள தொழிற்சாலைகளான துத்தநாக உருக்காலை, இரும்புத்தாது உற்பத்தி தொழிற்சாலை, ஒருங்கிணைந்த எஃகு ஆலை மற்றும் மென் இரும்பு ஆலை, தாமிர உருக்காலை, அலுமினிய உருக்காலை, எலும்பிலிருந்து உருவாக்கும் உணவுப்பொருள், விலங்கு கொம்புகள், குளம்புகள் மற்றும் பிற உடற்பாகங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுபவை, தோல் தொழிற்சாலைகள், ஆய்வுகள், துளையிடுதல், எண்ணெய் பிரித்தெடுத்தல் மற்றும் மீத்தேன் நிலக்கரி படுகை உள்ளிட்ட இயற்கை எரிவாயு, ஷேல் எரிவாயு (Shale gas) மற்றும் இதுபோன்ற ஹைட்ரோகார்பன்கள் மற்றும் கப்பல் உடைக்கும் தொழிற்சாலைகள் போன்றவைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

2019–2020 ஆண்டில் வாரிய செயல்பாட்டின் சிறப்பம்சங்கள்

i. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டப்படி நகர ஊரமைப்பு திட்ட இயக்குனரகம் / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்/ உள்ளூர் திட்ட ஆணைக்குழு மூலம் வகைப்படுத்தப்பட்ட தொழிற்துறை பயன்பாட்டு மண்டலம் / தொழிற்துறை மண்டலத்தில் அமைக்கப்படவுள்ள பச்சை வகை தொழிற்சாலைகளை



நிறுவுவதற்கான இசைவாணை பெறாமல் நேரடியாக தொழிற்சாலையை இயக்குவதற்கான இசைவாணை பெற்று இயங்குவதற்கு வாரியம் பரிந்துரைத்துள்ளது. இத்திட்டம், 13.01.2020 நாளிட்ட வாரிய நிகழ்வாணை எண். 1–ன்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ii. தேசிய பசுமை தீர்ப்பாயம், வழக்கு எண்.O.A. No. 360/2018–ல் பிறப்பித்த 26.09.2019 நாளிட்ட உத்தரவின்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுச்சூழல் துறையுடன் இணைந்து மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக பெறப்பட்ட விவரங்களை தொகுத்து வரைவு மாநில சுற்றுச்சூழல் திட்ட அறிக்கை தயாரித்து மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுப்பும் பொருட்டு 02.01.2020 அன்று அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

iii. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருவள்ளூர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

iv. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 75 கி.மீ. தூரத்திற்குள் மற்றொரு பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையம் நிறுவுவதற்கான தூர

அளவுகோல்களை தளர்த்தியுள்ளதுடன், தமிழ்நாட்டில் அமைந்துள்ள மருத்துவமனைகளிலிருந்து உருவாகும் மருத்துவ கழிவுகளை 48 மணி நேரத்திற்குள் எந்தவொரு பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்கும் கொண்டு செல்ல அனுமதித்துள்ளது.

v. தமிழ்நாட்டில் அமைந்துள்ள மருத்துவமனைகளிலிருந்து உருவாகும் உடலிலிருந்து வரும் திரவங்களை பிற நன்மை பயக்கும் மறுபயன்பாட்டிற்கு கையாள, ஒரு நிறுவனத்திற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

vi. வாரிய நடப்பாணை எண். 61, நாள்: 26.11.2019–ன்படி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், வாரியத்தின் இயக்குவதற்கான இசைவாணை (Consent to Operate) பெற்றபின் சாலைப் போக்குவரத்தை அனுமதிக்க வேண்டும் எனவும், சுங்கச்சாவடியின் மொத்த மதிப்பீட்டின்படி இசைவாணைக்கான தொகையை செலுத்தி இசைவாணையை புதுப்பிக்க வேண்டும் எனவும் ஒப்புதல் அளித்துள்ளது.

vii. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சாய, சலவை மற்றும் பிரிண்டிங் தொழிற்சாலைகள் மற்றும் தோல்



தொழிற்சாலைகள் அமைத்துள்ள எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலிருந்து வெளியேறும் அடர் கசடினை சூரிய உலர்படுகையில் (Solar Evaporation pan) வெளியேற்றாமல் இயந்திர ஆவியாக்க கலன் (Mechanical Evaporator) மற்றும் உலர்த்தி (Agitated Thin Film Drier) மூலம் வெளியேற்றும் அமைப்பினை 31.03.2020–ம் தேதிக்குள் நிறுவ வாரிய நடப்பாணை எண். 63, நாள்: 26.11.2019–ன்படி உத்தரவிட்டுள்ளது.

viii. சில முக்கிய ஆறுகள் மற்றும் நீர்நிலைகளிலிருந்து ஐந்து கி.மீ சுற்றளவில் வார்ப்பட தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு, 08.05.1998 நாளிட்ட தமிழ்நாடு அரசாணை நிலை எண். 127–ல் தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது அமையப்படும் நவீன வார்ப்பட தொழிற்சாலைகளிலிருந்து மிகக் குறைந்த அளவில் வெளியேறும் தொழிற்கழிவுநீர் சூரிய உலர்படுகையில் (Solar Evaporation Pan) விடப்பட்டு பூஜ்ஜிய கழிவுநீர் வெளியேற்றம் செய்வதாக, தொழிற்சாலைகளின் சங்கத்திலிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டன. இக்கோரிக்கையை நன்கு பரிசிலித்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வார்ப்பட தொழிற்சாலைகளுக்கு மேற்சொன்ன

அரசாணையிலிருந்து விலக்களிக்கலாம் என அரசுக்கு பரிந்துரைத்தது. அதனடிப்படையில் அரசு கடித எண். 93/சு.சூ.3/2019, நாள்: 17.09.2019–ல் மேற்குறிப்பிட்ட அரசாணை நிலை எண். 127–ல் வார்ப்பட தொழிற்சாலைகளுக்கு விதிக்கப்பட்ட தடையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

ix. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கட்டிட திட்டப்பணிகள் முடிவுற்று, உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்போர்களிடம் ஒப்படைக்கும் தருவாயில் பொதுவான பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்புகளை தொடர்ந்து இயக்குவதற்கு உரிமையாளர்கள்/குடியிருப்போர் சங்கங்கள் வாரியத்திடம் புதிதாக விண்ணப்பித்து இயக்க இசைவாணை பெற வேண்டும் என்று முடிவு செய்துள்ளது. இதனால் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு, டீசல் ஜெனரேட்டர் தொகுப்புகள், திடக்கழிவு மேலாண்மைக்கான இயற்கை கழிவு மாற்றிகள் ஆகிய சுற்றுச்சூழல் மேலாண்மை கட்டமைப்புகளை இயக்க, 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் ஆகியவற்றின் கீழ்



வாரியத்திடம் மேற்சொன்ன வசதிகளை ஏற்படுத்த செலவிடப்பட்ட மொத்த சொத்து மதிப்புகளின் அடிப்படையில் விண்ணப்பித்து, வாரியத்தின் இயக்க இசைவாணையை பெற வேண்டும். பின்னர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வாரியத்திற்கு விண்ணப்பித்து உரிய கட்டணத்தை செலுத்தி இயக்க இசைவாணையினை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

x. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நடப்பாணை எண். 28, நாள்: 06.08.2019–ன்படி தமிழ்நாட்டில் மின்னனு கழிவு உற்பத்தியின் இருப்பு கணக்கெடுப்பதற்கான பணியை மேற்கொள்ள தேசிய உற்பத்தி கழகத்திற்கு ரூ. 47.08 இலட்சம் வழங்கியுள்ளது.

K.C. கருப்பணன்
அமைச்சர் – சுற்றுச்சூழல்




நடமாடும் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையம்